**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 76/2025** |
| Deposition of witness | : | **PW-11** |
| Name | : | **சுசீலா** |
| Husband Name | : | **கோபகுமார்** |
| Age | : | **48** |

**Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 04.03.2026.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது குன்னத்தூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.07.2025 ஆம் தேதி குன்னத்தூர் காவல் நிலைய குற்ற எண் 266 of 2025 சட்டப்பிரிவுகள் 304(2) BNS கீழான வழக்கு காவல் உதவி ஆய்வாளர் ஈஸ்வரன் அவர்கள் விசாரணைக்கு இருந்ததை எனது தொடர் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவ இடத்தை பார்வையிட்டும் சாட்சிகளை விசாரித்தேன். உதவி ஆய்வாளர் வசம் கூறிய விபரங்களையே என்னிடமும் சொன்ன காரணத்தினால் மறுவாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை.

2. 08.08.2025 ஆம் தேதி வழக்கு சம்பந்தப்பட்ட வீடியோ பதிவுகளை பதிவிறக்கம் செய்து கொடுத்த குன்னத்தூர் காவல் நிலைய முதல் நிலை காவலர் 1339 சந்தோஷ் வேல் என்பவரிடம் 63(4)(c) BSA ன் படி சான்று பெற்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த குன்னத்தூர் தலைமை காவலர் 669 ரவிக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு வழக்கின்

B
DHARANEETHER
Digitally signed by
B
DHARANEETHER
Date: 2026.03.04
18:42:28 +0530

புலன் விசாரணையை முடித்து எதிரி மற்றும் இளம் சிறார் மீது குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. தலைமை காவலர் ரவிக்குமாரின் விசாரணை வாக்குமூலத்தின் படி 08.07.2025 ஆம் தேதி புகார்தாரர் புகார் கொடுக்க காலை 08.15 மணியளவில் காவல் நிலையம் வந்ததாக கூறியுள்ளார் என்றால் அவ்வாறு கூறவில்லை 08.15 மணிக்கு தான் நிலைய பொறுப்பில் இருந்ததாக தான் கூறியுள்ளார். இந்த வழக்கின் புகார்தாரரை எனக்கு இதற்கு முன்பாக தெரியாது. புகார்தாரரே புகார் எழுதி காவல் நிலையம் கொண்டு வந்தாரா என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியாது. ரவிக்குமாரின் விசாரணை வாக்குமூலத்தில் புகார்தாரருடன் யார் யார் காவல் நிலையம் வந்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை.

2. நான் இந்த வழக்குக் கோப்பை 13.07.2025 ஆம் தேதி காலை எட்டு மணி அளவில் எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். சந்தோஷ் வேல் கொடுத்த சாட்சிய சான்று எப்போது கொடுக்கப்பட்டது என்றால் 08.07.2025 முதல் தொடர்ந்து சேகரிக்கப்பட்ட கேமரா பதிவுகளை 08.08.2025 ஆம் தேதி மேற்படி சான்றுடன் தாக்கல் செய்தார். என்னுடைய விசாரணை வாக்குமூலத்தில் தான் 08.07.2025 தேதி முதல் இந்த இந்த நாட்களில் கேமரா பதிவுகளை சேகரித்தேன் என்று சந்தோஷ் வேல் சொல்லவில்லை என்றால் சரிதான். சிசிடிவி கேமரா பதிவுகள் உள்ள கேமராக்களின் உரிமையாளர்களை நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் இல்லை.

3. மேற்படி கேமிராக்கள் அமைந்துள்ள இடம் சம்பவம் இடத்திலிருந்து எவ்வளவு தொலைவில் உள்ளது என்று விபரம் எனக்கு தெரியுமா என்றால் சுப்பிரமணியின் கடை மற்றும் ஏர் இந்தியா டெக்ஸ்டைல்ஸ் சம்பவ இடத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் உள்ளது. சந்தோஷ் வேல் எனது விசாரணை வாக்குமூலத்தில் எதிரிகள் பற்றியோ, அவர்களது உடல்வாகு பற்றியும், அடையாளங்கள் மற்றும் வயது பற்றியும் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். சந்தோஷ் வேல் நான் சொன்ன வாய்மொழி உத்தரவின் பெயரில் தான் கேமராக்களை பார்வையிட சென்றார்.

4. நான் சந்தோஷ் வேலுக்கு 08.07.2025 ஆம் தேதி காலை சுமார் 09.30 மணிக்கு கேமரா பதிவுகளை எடுத்து வர வாய்மொழியாக உத்தரவிட்டேன். சந்தோஷ் வேல் எனது விசாரணை வாக்குமூலத்தில் எதிரிகள் பயன்படுத்திய வாகனத்திற்கு பதிவு எண் பிளேட் இருந்ததா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் சம்பவ இடத்தில் U turn போட்டு வந்ததாக புகார்தாரர் சொல்லும் நிலையில் அதனைக் காட்ட கேமரா பதிவுகள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வீடியோ பதிவுகள் நான் சொல்லும் இடத்தில் இருந்து எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.